

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு,காவேரிப்பட்டணம் கே.வி.எஸ்.குழுமம் சார்பில் ரூ.15 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருட்களையும், தி.மு.க. மாநில மாநாட்டிற்காக ரூ.10 லட்சம் நிதியை கழக இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், தி.மு.க. பிரமுகரும், தொழிலதிபருமான கே.வி.எஸ். சீனிவாசன் வழங்கினார்.




சேலத்தில் தி.மு.க. இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள மாநாட்டுக்கு திண்டிவனம் ஜெயபுரம் கவுன்சிலர் ரேகா நந்தகுமார் மாநாட்டுக்கு 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை தனது குடும்பத்துடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

## தென் மாவட்டங்களில் கனமழை:

# ஆவின் பால் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நடவடிக்கை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.19 –

தென் மாவட்டங்களில் கனமழைக் காலத்திலும் முன்னெச்சரிக்கையாக ஆவின் பால் தடையின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:–

தென் மாவட்டங்களில் தொடர் கனமழை பெய்து வரும் நிலையில் பொதுமக்களுக்கு பால் தட்டுப்பாடு இன்றிக் கிடைக்க ஆவின் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தூத்துக்குடி, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் கன மழை பெய்து வருவதையொட்டி இம்மாவட்டங்களில் போதிய அளவு ஆவின் பால் பொதுமக்களுக்கு கிடைக்க ஆவின் நிறுவனம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆவின் நிறுவனம் பேரிடர் காலங்களில் பொதுமக்களின் பால் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வெளி மாவட்டங்களில் இருந்து கூடுதலாகப் பால், பால் பவுடர் மற்றும் நீண்ட நாள் உபயோகப்படுத்தக் கூடிய (UHT) பதப்படுத்தப்பட்ட பால் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பொதுமக்களுக்கு தங்குதடையின்றி பால் கிடைக்க போதுமான அளவு கையிருப்பு உள்ளது. மக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை என்று ஆவின் நிறுவனம் தெரிவித்துக்கொள்கிறது.

## தூத்துக்குடிக்கு விரையும் பேரிடர் மீட்புக் குழு!

சென்னை, டிச. 19 –

தென்இலங்கை கடற்கரை பகுதியை ஒட்டிய வங்கக்கடல் பகுதிகளில் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்துவருகிறது.

குறிப்பாக நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் இரவு தொடங்கிய கனமழை, தற்போது வரை நீடித்து வருகிறது. தொடர்ந்து பெய்துவரும் கனமழையால், சாலைகளில் மழைநீர் தேங்கி காணப்படுகிறது. இதனால் வாகன ஓட்டிகள் அவதியடைந்துள்ளனர்.

தொடர் மழையால் நெல்லை களக்காடு தலையணை பகுதியில் குளிக்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது. அகஸ்தியர் அருவி, சொரிமுத்து அய்யனார் கோவிலுக்கு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குற்றாலம் மெயின் அருவியில் தண்ணீர் வரத்து அதிகரிப்பால், குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

அதேபோல பேச்சிப்பாறை அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கன அடி உபரி நீர் திறக்கப்படுகிறது. அத்துடன் திற்பரப்பு அருவியில் குளிக்கத்தடை விதிக்கப் பட்டுள்ளது/ கனமழை காரணமாக சுற்றுலாத்தலமான குமரியில் விவேகானந்தர் மண்டபம் மற்றும் திரு வள்ளுவர் சிலைக்கு இயக்கப்படும் படகு போக்குவரத்து ரத்துசெய்யப்பட்டுள்ளது.



# இன்று பேராசிரியர் பிறந்தநாள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினர்!

# வளசரவாக்கம் 149வது வட்டத்தில் 2000 பேருக்கு நிவாரணம்!

### காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. – நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு! த.ரமேஷ் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, டிச.18 -

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி, வளசரவாக்கம் 149வது வட்டத்தில் 2000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை டி.ஆர்.பாலு எம்.பி., மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., 11வது மண்டல குழுத் தலைவர்மதுரவாயல் வடக்குப்பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. செல்வி ரமேஷ், எம்.சி. ஆகியோர் நேற்று முன்தினம் (17.12.2023, ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் (சி.வி..கோயில் தெரு, ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம்) வழங்கினர்.

இந்நிகழ்வில் மதுரவாயல் தெற்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள் மற்றும் பகுதி கழக துணைச்செயலாளர் வே.மதியழகன், ஆர்.சுரேஷ்பாபு, எம்.கிருஷ்ணமூர்த்தி, டி.என். கமலநாதன், திருமதி.குப்பு ராஜேந்திரன், எம்.குமார், பி.எஸ்.துரைசாமி, கே.சரவணன், எம்.ஏ.வி.சீனு. , எஸ். சுந்தரர்ராஜன், எஸ்.ஆறுமுகம், எம்.முரளி, எஸ்.அமல்ராஜ், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், ஆர்.விஜய், ஆர். வினோத், எஸ்.பரத், கே.ஜி. ஜெயவேல், எஸ்.குகா கார்த்திக், ஆர்.சிவலிங்கம், என். உடையப்பா, டி.மோகன், எம்.ஏ.வீரராகவன், டி.மோகனவேல், வி.டி.அரசு, எஸ். ரவி, பி.சேகர், ஏ.கணேசன், எம்.அமுல்ராஜ், பி.பொன் முத்துரமேஷ், சி.பாலமுருகன், ஆர்.அண்ணாமலை, டி.சித்ராதங்கராஜ், ஆர். எம். பழனியப்பன், ஆர்.கல்யாண சுந்தரம், சி. சிவராமகிருஷ்ணன், எம்.சுரேஸ்மோசஸ், பி. கிருஷ்ணன், சுஜாதாந ரசிம்மன், என்.முருகேசன், வி. ஹேமந்த்குமார், எம்.கிருஷ்ணன், பி.சிவக்குமார், எஸ். அன்பழகன், எம்.சின்னு, எம். கார்த்திக், கே.எம்.சம்பத்குமார், எம்.சுரேஷ், ஸ்வீட் கிருஷ்ணன், எம்.ரவீந்திரன், கே.சரவணன்கிருஷ்ணமூர்த்தி, கே. அருள்குமார், ஆர்.தமிழ்காவ்யா, என். ராஜா, ஆர்.சந்திரகுமார், பாரதி மற்றும் கழக முன்னோடிகள், நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார்.

## சைதை மேற்கு – 140வது வார்டில் – வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் ஏற்பாட்டில்

# 10 ஆயிரம் பேருக்கு நிவாரண உதவிகள்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. – பா.மணிமாறன் பங்கேற்பு!

சென்னை, டிச.19 -

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்குப் பகுதி 140வது வார்டில் மிக்ஜாம் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வார்டு மாமன்ற உறுப்பினரும் பொதுக்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் ஏற்பாட்டில், கிருஷ்ணப்பநாயக்கன் தெரு, பழைய மாம்பலம் சாலை, ஆதிகேசவபெருமாள் கோயில் தெரு, புஷ்பாவதி அம்மாள் தெரு, பன்னீர்செல்வம் நகர் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் (17.12.2023 - ஞாயிற்றுக்கிழமை) பத்தாயிரம் பேருக்கு அரிசி, சமையல் எண்ணெய், பெட்சீட், பிஸ்கட் ரஸ்க், பால் பாக்கெட் ஆகியவற்றை சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன், சைதை மேற்குப் பகுதிச் செயலாளரும், மண்டலக் குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாடு மின்சார வாரிய தொ.மு.ச. பொதுச் செயலாளர்பா.மணிமாறன்ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் பகுதிக் கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், வட்டக் கழக செயலாளர்கள் ந.தமிழரசு, சை.மு.சேகர், மாவட்ட பிரதிநிதிகள் கு. புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டி ஆர்.எல். செல்வம், ஆர்.ரவி, பொன்ஜெய்சிங், ஜி.பாபு, அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஆர்.கிருஷ்ணகுமார், கே.பிரபு, நகர் சேகர், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஜி.ஜே. மோசஸ், போட்டோ மாறன், வட்டக் கழக நிர்வாகிகள் பிரஸ் க.மணி, லால் மனோகரன், எஸ்.மணிவண்ணன், எம். வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ், எம்.அய்யாவு, ஆர்.பன்னீர், இ.பாண்டுரங்கன், கே.ஞானம், வி,மனோகரன், ஆர்.ஜெகன்நாதன், தென்றல் தினேஷ், கே. கௌரி, ஜெ.விஜயகுமார், எஸ்.பஷீர், கே.துளசி, எஸ். சரவணன், வீ.கமல்சங்கர், பிரஸ்விஜி, இளைஞர் அணி நிர்வாகிகள் க.தீபன், ம.சுகுமார், இரா.சத்யா உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## மிக்ஜாம் புயல்: ‘அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் நோய்ப் பரவல் இல்லை’ என

# தமிழ்நாடு அரசுக்கு - ஒன்றிய அரசு குழு பாராட்டு!

### மழைக்கால 8–வது சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்து – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!



சென்னை, டிச.19 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவத்துறை வரலாற்றில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் 7 வாரங்களில் 16,516 முகாம்கள் நடைபெற்று, 7,83,443 பேர் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர் என்றும் மிக்ஜாம் புயல் பாதிப்பு கண்டறிய வந்த ஒன்றிய அரசு குழு தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் நோய் பரவல் இல்லை என்று மருத்துவத்துறைக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 8வது வாரம் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (16.12.2023) அன்று அடையாறு மண்டலம், வேளச்சேரி 100 அடி சாலை, சசிநகரில் நடைபெற்ற மழைக் கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு 29.10.2023 அன்று தொடங்கி ஒவ்வொரு வாரம் சனிக்கிழமையும் தமிழ்நாடு முழுவதும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, தொடர்ச்சியாக 10 வாரங்கள் இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் இன்று (16.12.2023) 8வது வாரம் 3000 இடங்களில் தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதுவரை 7 வாரங்களாக நடைபெற்றுள்ள மொத்த முகாம்களின் எண்ணிக்கை 16,516. இது வரை பயன்பெற்றுள்ள பயனாளர்களின் எண்ணிக்கை 7,83,443 பேர். இதில் காய்ச்சல் பாதிப்புகள் என கண்டறியப்பட்டவர்கள் 3,270 பேர், சளி மற்றும் காய்ச்சல் பாதிப்புகள் கண்டறியப்பட்டவர்கள் 1,972 பேர், அண்மையில் ஒன்றிய அரசு சார்பில் மிக்ஜாம் புயல் பாதிப்புகள் குறித்து பார்வையிட வந்திருந்த அலுவலர் குழு சார்பில் அதன் தலைவர் பத்திரிக்கையாளர் சந்திப்பில் தமிழ்நாடு அரசு வெள்ள மீட்புப் பணியில் மிகச்சிறப்பான வகையில் கையாண்டிருக்கிறது. அதே போல் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மருத்துவ முகாம்கள் போன்ற பணிகள் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டு இருப்பதால் பெரிய அளவிலான பாதிப்புகள், நோய்த்தொற்றுகள் இல்லை என்று கருத்துக்களை தெரிவித்து இருக்கின்றனர். இந்த மருத்துவ முகாம்களில் 9 மாதம் தொடங்கி 15 வயது வரை உள்ள சிறார்களுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. குறிப்பாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு உள்ளான பகுதிகளில் ரூபெல்லா தடுப்பூசி போடும் பணிகள் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையல் இன்று நடைபெறும் மருத்துவ முகாம்களில் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, தரைத்தளத்தில் உள்ள குடிநீர் தொட்டிகளை பிளிச்சிங் பவுடர் பயன்படுத்தி தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மிக்ஜாம் புயல் பாதிப்புகளுக்குள்ளான 4 மாவட்டங்களில் நடைபெறும் மருத்துவ முகாம்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரை கிலோ பிளிச்சிங் பவுடர் தரப்பட்டு வருகிறது.

**கோவிட் பாதிப்புகள் குறித்து பயப்பட தேவையில்லை**

கொரோனா என்பது 2019 இறுதியில் தொடங்கி அது பல்வேறு வகையில் உருமாற்றங்களை பெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நோய் எதிர்ப்பு சக்திகளை மேம்படுத்திடும் வகையில் 98% மேலானவர்களுக்கு 3 விதமான தடுப்பூசிகள் போடப்பட்டு தமிழ்நாடு மக்களிடையே நோய் எதிர்ப்பு சக்தி என்பது கூடுதலாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் இதே நிலை நீடித்து வருகிறது. இதனால் கோவிட் உருமாற்றம் என்பது தொடர்ச்சியாக கோவிட், ஆல்பா, பீட்டா, டெல்டா, டெல்டா பிளஸ், கம்மா, கப்பா, ஒமைக்ரான் போன்ற பல்வேறு வகையில் உருமாற்றம் என்பது தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் கடந்த 1 வாரத்திற்கு மேலாக சிங்கப்பூர் நாட்டில் உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று பரவல் இருப்பது அறியப்பட்டது. உடனடியாக சிங்கப்பூரில் உள்ள National Institute of Singapore அமைப்பில் உள்ள மருத்துவர்களோடு நாங்கள் தொடர்பு கொண்டு இந்த உருமாறிய வைரஸ் எந்தவகையிலான பாதிப்பை உருவாக்குகிறது என்று வினவிய போது, அவர்கள் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களுக்கு மூன்று அல்லது நான்கு நாட்களில் தொற்று சரியாகிவிடுகிறது. இருமல் மற்றும் சளி ஆகிய இரு உபாதைகள் மட்டுமே இதனால் ஏற்படுகிறது என்று அவர்கள் கூறியுள்ளனர். நேற்றைக்கு கேரளா மாநிலத்தில் 280 பேருக்கு கொரோனா பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளதை தொடர்ந்து, நமது பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அவர்கள் கேரள மாநிலத்தின் பொது சுகாதாரத் துறை அலுவலர்களோடு பேசியுள்ளார். எனவே இந்த தொற்றின் பாதிப்பு என்பது மிதமான பாதிப்பாகவே உள்ளது, பாதிக்கப்பட்டவர்கள் 4 நாட்களிலேயே சரியாகி விடுகின்றனர் என்பது இன்றைய கள நிலவரமாக உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே. எம்.எச்.அசன் மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் டாக்டர்.ஜெ.இராதா கிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ் மற்றும் உயரலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், எளச்சிபாளையம் ஒன்றியம் மற்றும் குமாரபாளையம், பள்ளிபாளையம் நகராட்சிகளில் ரூ.5.59 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், நகரமன்றத் தலைவர்கள் த.விஜய்கண்ணன், மோ.செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் எம்.தங்கவேல், செல்வம், நாச்சிமுத்து, இளங்கோவன், நகர செயலாளர்கள் அ.குமார், ஞானசேகரன், அ.ரவிச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர்ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா கண்காட்சியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் வட்டாரக் கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன், குலோத்துங்க சரவணகுமார் உள்ளனர்.